அனுப்புநர்

முனைவர்.சி.உஷாராணி,
M.Sc.,B.Ed.,Ph.D.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
மற்றும் இணை இயக்குநர் (கல்வி),
புதுச்சேரி.
அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள்
உதவி இயக்குநர்கள்.

ந.க.எண். 084238 / எப் 1/2019 நாள் : 05.03 .2020

ஐயா/அம்மையீர்,

**பொருள் :** செ–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் - மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள், மார்ச் 2020 – பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட அகமதிப்பீட்டு மதிப்பெண்கள் (Internal Marks) / செய்முறைத் தேர்விற்கான (Practical Marks) மதிப்பெண்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்தல் – கூடுதல் அவகாசம் வழங்குதல் – தொடர்பாக

**பார்வை:**
1. அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.000297/எப்1/2020 மற்றும் சுற்றறிக்கை, நாள்.08.01.2020.
2. அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.000298/எச்1/2020 மற்றும் சுற்றறிக்கை, நாள்.08.01.2020.
3. அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் இதே எண்ணிட்ட கடிதம் மற்றும் சுற்றறிக்கை, நாள்.10.01.2020.

-----

பார்வையில் காணும் கடிதங்களின் வாயிலாக, மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பயிலும் பள்ளி மாணாக்கர்களுக்கு செய்முறைத் தேர்விற்கு வழங்கப்பட்ட மதிப்பெண்களை முதன்மைக் கல்வி அலுவலகங்கள் வாயிலாக (மேல்நிலை இரண்டாமாண்டிற்கு 12.02.2020 முதல் 27.02.2020 வரையிலும், மேல்நிலை முதலாமாண்டிற்கு 17.02.2020 முதல் 27.02.2020 வரையிலான தேதிகளிலும்) இணையதளம் வாயிலாக பதிவேற்றம் செய்திடுமாறும், +1 மற்றும் +2 மாணாக்கருக்கு பள்ளிகளில் வழங்கப்பட்ட அகமதிப்பீட்டு மதிப்பெண்களை சம்பந்தப்பட்ட பள்ளிகள் வாயிலாக 10.02.2020 முதல் - 27.02.2020 வரையிலான தேதிகளில் இணையதளம் வழியாகப் பதிவேற்றம் செய்திடுமாறும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

ஒரு சில மாவட்டங்களிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளின் மாணாக்கரின் அகமதிப்பீட்டு மதிப்பெண் மற்றும் செய்முறைத் தேர்வு மதிப்பெண்கள் இதுவரை பதிவேற்றம் செய்யப்படாமல் உள்ளதாக அறியப்படுகிறது.

..2..

எனவே, இணையதளம் வாயிலாக அகமதிப்பீட்டு மதிப்பெண்களையும், செய்முறைத் தேர்வு மதிப்பெண்களையும் பதிவேற்றம் செய்வதற்காக 05.03.2020 முதல் 10.03.2020 வரை கூடுதலாக அவகாசம் வழங்கப்படுகிறது. இவ்விவரத்தினை முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்களது ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் தெரிவித்து உரிய அறிவுரைகளை வழங்கி இப்பணியினை விரைவில் முடிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் ,அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்களும் தங்கள் அலுவலகத்தில் இதுவரை பெறப்பட்ட +1 Arrear தேர்வர்களது செய்முறைத் தேர்வுக்கான மதிப்பெண் பட்டியல்களை **06.03.2020 –** தேதிக்குள் தங்கள் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்குறிப்பிட்டவாறு ஒப்படைக்கப்படும் செய்முறைத் தேர்வுக்கான மதிப்பெண் பட்டியல்களில் உள்ள விவரங்களை முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட User Id மற்றும் Password –ஐ பயன்படுத்தி பதிவேற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/–
**இயக்குநர்**

**நகல்**
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.